RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt224s22261

OPEN ACCESS

# வ.சுப.மாணிக்கம் வலியுறுத்தும்அகத்திணைக் கல்வியின் அவசியம்

**கோ. பத்மவிலாசினி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால் பட் மகளிர் வைணவக் கல்லூரி, குரோம்பேட்டை, சென்னை-600044, தமிழ்நாடு, இந்தியா

# V.Suba.Manikam's Insists on the Study of Internal Affairs

**K. Padmavilasini** [a, *]

[a] Department of Tamil, Shrimathi Devkunvar Nanalal Bhatt Vaishnav College for Women, Chromepet, Chennai-600044, Tamil Nadu, India

* Corresponding Author: vilasini80@gmail.com

Received: 26-09-2022
Revised: 06-11-2022
Accepted: 11-11-2022
Published: 05-12-2022

**ABSTRACT**

Literature conveys directly or indirectly what is needed for people's life. Literature brings out the social concepts that are relevant to all times. Through Sangam literary texts, Tolkappiyam and Thirukkural one can know the civilization, lifestyle and culture of ancient Tamil people. Sangam literary texts which clearly shows up the lifestyle of ancient Tamil people suggests the people to learn and understand about internal affairs. 65 years ago in 1957, V. Suba Manikam had clearly explained about its importance in his research book Tamil Kadhal. This article deals primarily with the importance of such internal affairs education.

**Keywords:** Literature, Internal Affairs, Sangam literary, texts, Tolkappiyam, Thirukkural

## முன்னுரை

இலக்கியங்கள் மக்கள் வாழ்க்கைக்குத் தேவையானவற்றை நேரடியாகவோ மறைமுகமாகவோ உணர்த்தும் பண்பு நலம் கொண்டதாகும். அக்காலம் இக்காலம் என்றில்லாமல் எல்லா காலத்திற்கும் பொருந்து வகையிலான சமுதாயக் கருத்துகளை எடுத்துரைப்பானவாக அமைந்துள்ளன. பண்டைத் தமிழரின் நாகரிகம், வாழ்க்கை முறை, பண்பாடு ஆகியவற்றை அறிய சங்க இலக்கியமும் தொல்காப்பியமும் திருக்குறளும் சிறந்த சான்றுகளாக விளங்குகின்றன. பழந்தமிழ் மக்களின் வாழ்வினைத் தெள்ளத்தெளிவாகக் காட்டும் கண்ணாடியாக அமைந்துள்ள சங்க இலக்கியங்கள் கூறும் அகத்திணைக் கல்வியை மாணவர்கள் மட்டுமின்றி அனைவரும் கற்று உணர வேண்டியதாகும். இதன் முக்கியத்துவத்தை 65 ஆண்டுகளுக்கு முன்பே 1957 இல் வ.சுப.மாணிக்கனார் அவர்கள் தமிழ்க் காதல் என்கிற தம் ஆய்வு நூலில் மிகத் தெளிவாக உணர்த்தியுள்ளார். மானுடவியல் பண்பில் முதன்மையாகத் திகழும் அத்தகைய அகத்திணைக் கல்வியின் முக்கியத்துவம் குறித்து கட்டுரையில் காணலாம்.

## சங்ககாலமும் அகத்திணைக் கல்வியும்

சங்க காலம் பொற்காலமாகத் திகழ்ந்ததற்குச் சான்றாய் விளங்குவன எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஆகும். பக்திக்குரிய மொழியாகத் தமிழ் மொழி திகழ்ந்தாலும் சங்க காலத்தில் தோன்றிய நூல்களைப் பார்க்கும்போது அகத்திற்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தை உணர

முடிகிறது. பழந்தமிழர் அக வாழ்வைக் களவு கற்பு எனக் கொண்டு இன்பம் துய்த்தனர். அகத்திணை என்பது தமிழர் கண்ட காதல் நெறி என்பார் ஆசிரியர். "எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது தானமர்ந்து வருஉம் மேவற்றாகும்" என்ற வரிக்கேற்ப சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் தங்களின் இன்பத்தைத் தங்களின் எண்ணப்படி அமைத்துக் கொண்டனர் (Subramaniyan, 1998). சமுதாயச் சூழலும் அத்தகையதாகவே அமைந்திருந்தது. அக்காலத்தில் கல்வியும் பண்புமே சிறந்த செல்வமாகக் கருதப்பட்டது. மக்கள் இதனையே தம் கண்களாகக் கொண்டு செயல்பட்டனர் என்பதைக் காண முடிகிறது.

ஆனால் இன்று செல்வம் என்றால் பணம் என்று மாறிவிட்ட இக்காலகட்டத்தில் அகத்திணை பற்றிய எண்ணமும் முழுமையும் மாறிவிட்டதைப் பார்க்க முடிகிறது. சமுதாயத்தில் மனிதனுக்கு ஒன்றைப் பற்றிய தெளிவான எண்ணம் இல்லை என்றால் அதனைக் கற்றுக் கொடுத்தல் அவசியம். அத்தகைய நிலையில் அகத்திணை பற்றிய கல்வி ஆண், பெண், சிறியோர், பெரியோர் என அனைவருக்கும் அவசியம் தேவைப்படும் இக்கல்வியைக் கற்றுக்கொடுத்தல் சான்றோர் கடனாகிறது.

## சங்க காலத்தில் அகத்திணை அறிவு

அகத்திணையின் இயல்பு பற்றித் தெளிவாக விளக்க தொல்காப்பியர் அகத்திணையில், களவியல் கற்பியல், பொருளியல் என்று நான்கு இயல்களை வகுத்துள்ளார். புறத்திணையின் இயல்பை புறத்திணையியல் என்ற ஒரே இயலில் கூறிச் செல்கிறாரெனில் அக்காலத்திலேயே அகத்திணை பற்றிய விழிப்புணர்வு இருந்தது என்பதை அறிய முடிகிறது.

ஆரிய அரசன் பிரகதத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்துவதற்காகக் குறிஞ்சிப்பாட்டு என்ற நூல் பாடப்பட்டது என்றால் தமிழின் பலமே அகத்திணையில் தான் உள்ளது என்பதைச் சான்றாகப் பகரலாம்.

"தள்ளாப் பொருளிய லேபிள் றண்டமிழாய் வந்திலர்

கொள்ளாரிக் குன்று பயன்" (Manikkam, 2008)

தமிழின் பொருளிலக்கணத்தைக் கல்லாத அறிவுக் குறையுடையவர்களே காதற் களவைக் குறை கூறுவர் எனவும் தமிழை ஆய்ந்தவர் களவு நெறியை உடன்படுவர் என்று பரிபாடல் கூறுவதன் வழி அகத்திணைப் பற்றிய தெளிவை அறிய முடிகிறது.

பாண்டிய மன்னன் தமிழை வளர்க்க எண்ணிய போது "எழுத்தும் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேம் எனின் இவை பெற்றும் பெற்றிலேம்" என்று கூறுகிறார் (Manikkam, 2013). பின்பு 60 சூத்திரம் கொண்ட அகப்பொருள் இலக்கணத்தைப் பெற்றான் என்றும் அதனால் அவன் மகிழ்ந்தான் என்றும் அறிகிறோம். இங்கு மன்னன் எந்த இடத்திலும் புறநூல் ஒன்று கிடைத்தால் மகிழ்வேன் என்று கூறியதாக எந்தத் தகவலும் இல்லை. பண்டைக் காலத்தில் பொருள் இலக்கணம் என்றாலே அகத்திணையைக் குறித்தது என்பதை அறிய முடிகிறது. இந்நிகழ்வின் வாயிலாக அகத்திணையிலக்கணம் படைக்கவே எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும் இருந்தது என்பதையும் அக்கால மக்கள் அகத்திணைக் குறித்த தெளிந்த அறிவு பெற்றிருந்தனர் என்பதையும் அறிய முடிகிறது.

அகநானூறு (400) நற்றிணை (400) குறுந்தொகை (401) ஐங்குறுநூறு (500) கலித்தொகை (149) பரிபாடல் (8) பத்துப்பாட்டு (4) என சேர்த்து 1862 பாடல்கள் அகத்திணைப் பாடல்கள் அமைந்துள்ளன எனில் அவர்கள் அகத்திணை அறிவு நிரம்ப பெற்றிருந்தது தெளிவாகிறது.

அகத்திணை என்பது தமிழர் கண்ட காதல் நெறி. அகத்திணை அறிவு ஆணும் பெண்ணும் கட்டாயம் பெற்றிருத்தல் வேண்டும். சங்க இலக்கியத்தில் "பேரமர் உண்கன் இவளினும் பிரிக" (Manikkam, 2008) பூதப்பாண்டியனும் "வரைவின் மகளிர் மார்பிடை என் மாலை படுக" சோழ நலங்கிள்ளியும் கூறும் வஞ்சினங்களில் அன்னோர் மனையன்பைக் காண முடிகிறது. அக்கால மன்னர்களே தம் சிறந்த மனை வாழ்வுடன் செவ்விய கணவனாக ஒழுகியதால் மக்களும் அவ்வழியே நடந்தனர் என்பதை அறிய முடிகிறது. 2000க்கும் மேற்பட்ட அகச் செய்யுள்கள் சங்க இலக்கியத்தில்

காணப்படுகிறது எனில் மக்கள் அகத்திணைக் கல்வியில் தெளிவு பெற்றிருந்தனர் என்பதைக் கணக்கிட முடிகிறது.

## காதல் காமம்

காதல் என்ற சொல்லுக்குப் பல பொருள் உண்டெனினும் உள்ளத்தோடு இயைந்த தொடர்பு காதல் எனலாம். காதலன் காதலி என்று கூறும்போது அது பாலுறவைக் காட்டி நிற்கும். காமம் என்ற சொல்லிற்கு மெய்யுணர்ச்சி என்பது பொருள். "மெய்யில் தீரா மேவரு காமம்" என்பார் கபிலர் (Manikkam, 2008). காமம் என்பது பருவ உணர்ச்சி, மெல்லிய உடல் உணர்ச்சி, காம உணர்ச்சி. இளமைக்காலத்தில் பெருகி முதுமைக் காலத்தில் குறைந்தும் காணப்படும். "அகத்திணை என்பதற்கு வெறும் உள்ளக்காதல் என்பது மட்டும் பொருளல்ல. அதேப்போல் மெய்ப்புணர்ச்சி என்பதும் பொருள் அல்ல. உள்ளம் இயைந்த உடலுறவும் உடல் இயைந்த உள்ள உறவுமாகும். சுருங்கக்கூறின் உயிர்மெய்ப் புணர்ச்சியே அதன் பாடுபொருள்" என்று என்று விளக்கம் கூறுவார் ஆசிரியர் (Manikkam, 2013). இத்தகைய காதலும் காமம் இணைந்த இடங்களையே சங்க இலக்கியப் பாடல்களில் காண முடிகிறது.

## அன்புணர்வும் ஐயவுணர்வும்

களவுக் காலத்தில் தோழி தலைவனிடம் பலமுறை வரைவு கடாவும் போதும் அவன் வரைவு நீட்டிக்கும் போதும் அங்கு ஐயவுணர்வு தோன்றுதல் இல்லை. வேற்றுமணம் என்ற கருத்துக்கோ அவ்வெண்ணத்தை வைத்து தலைவன் வரவு நீட்டித்தல் என்கிற நிலையோ அங்கு இல்லை. தலைவன் பொருள் வயிற் பிரிவின்போதும் பரத்தையின்பால் பிரிந்த போதும் தலைவி ஐயுறுதல் இல்லை. காதலன் மேல் காதலிக்கும் காதலியின் மேல் காதலனுக்கும் ஐயம் தோன்றல், ஏன் சிந்தித்தல், காரணம் தேடுதல் என்பதே கிடையாது. இதனையே ஆசிரியர் "காதல் உலகில் ஐயப்பாதை சாவுப் பாதை" என்கிறார் (Manikkam, 2013). இது படிப்பவர்களையும் ஐயப்பாதைக்குக் கொண்டுச் செல்ல நேரிடும். எனவே இலக்கியங்கள் தூய நெறியைக் கற்றுக் கொடுக்க வேண்டும். இதனை ஆசிரியர் "பிற இலக்கியங்கள் எல்லாம் வழுவமைதி இலக்கியம். அகத்திணை ஒன்றுதான் வழாநிலை இலக்கியம். இவ்விலக்கியத்தில் முடிவும் தூயது. அம்முடிவினைக் கற்பிக்க மேற்கொண்ட நெறியும் தூயது. காதல் ஞாலத்து நிறை நெஞ்சம் வேண்டும் மனித குலம் தமிழ் அகத்திணையைக் கற்க வேண்டும்" என்று கூறி அதற்குச் சான்றாக சிலம்பையும் மேகலையும் காட்டுகிறார். இதனால் இக்காப்பியங்களும் அகத்திணைக் கல்வியை மிகத் தெளிவாகப் போதிக்கின்றது என்பதனை அறியமுடிகின்றது (Manikkam, 2013).

## காமப்புணர்ச்சியும் காமமதிப்பும்

தமிழ் இலக்கியம் காமப் புணர்ச்சி சிறந்தது என்று தான் கூறுகிறது. அகத்திணைப் பாடல்களான அன்பின் ஐந்திணைகளும் காமப் புணர்ச்சியின் கூறுகளையே கூறுகிறது. ஆண்பாலின் பெருமிதத்தையும் உரனையும் மனைவி மதிப்பதும், பெண்பாலின் அருமையையும் நிறைவையும் நாணத்தையும் கணவன் மதிப்பதும் ஆகிய கல்வியை அகத்திணை இலக்கியம் வழி அறிலாம். "காதலன் காதலியின் காமக் கூறுகளையும் அவள் அவன் தன் காமக்கூறுகளையும் புரிந்து கொண்டு ஒழுக வேண்டும். உணராக் குறை ஒரு கோடி கேடு தரும். காமக் குறையினால் இல்லறம் கெடும்." என்பார் ஆசிரியர் (Manikkam, 2013). ஆம் தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் புரிந்து செயல்படுதலையே இங்கு ஆசிரியர் சுட்டுகிறார். புரிதல் என்பது சொல்லாலும் செயலாலும் உணர்வாலும் புரிந்து செயல்படுவதே ஆகும். இதனைச் சங்க இலக்கியத் தலைவனும் தலைவியின் வாயிலாக இலக்கியங்கள் சுட்டுகின்றன. ஆடவன் தன் காமத்தை வெளிப்படச் சொல்வான். பெண் நாணத்தால் மறைப்பாள். ஆனால் இந்த இயல்பு பொதுவானது. இதை உணர்ந்து தலைவனும் தலைவியும் செயல்படும்போது இன்பம் நிலவும்.

## பாலியல் கல்வியின் அவசியம்

சங்க இலக்கியம் ஒரு பாலிலக்கியம். இதிலிருந்து பல அகம் சார்ந்த நுணுக்கங்களைக் கற்றுக் கொள்கிறோம். இயற்கை, செயற்கைத் திரிபுகளும் மிகத் தெளிவாக விளக்குகிறது. அகத்திணை வாழ்க்கைக்குரிய இலக்கியம். சங்க கால வாழ்வில் அனைவரும் தெளிவுற்றிருந்த அகத்திணை பற்றிய தெளிவுப் பெற்றிருந்தனர்.

இன்றைய சமூகத்தினர் நாகரிக வளர்ச்சி என்ற பெயரில் திசை மாறி சென்று கொண்டிருக்கின்றனர். அதனால் இன்றைய இளம் தலைமுறையினர் முதல் பெரியவர்கள் வரை பாலியல் கல்வி பற்றிய விழிப்புணர்வு மிக அவசியமாகிவிட்டது. இன்றைய சூழலில் மானுடவியல் பண்பில் மிக முக்கியமாகத முதன்மையானதாகக் கருதப்படுவது பாலியல் கல்வி என்கிற அகத்திணைக் கல்வியாகும். இதனையே ஆசிரியர் "அகத்திணைக் கல்வி கற்கும் நல்லிளைஞர் இளைஞியர் இன்றியமையாத உள்ளப் பண்பாவது கற்பு என்றும் இன்றியமையாத உடல் விளையாடுவது காமம் என்றும் தெளிவாக விளக்கிக் கொள்வர். ஒருவர் காமத்தை ஏனையர் மதித்து ஒழுகுவர். காம நிறைவு மன நிறைவாம் என்று இன்பச் செய்கையில் மீக்கொள்வர்" என்கிறார் ஆசிரியர் (Manikkam, 2013).

ஆசிரியர் கூறுவது போல அகத்திணைக் கல்வி கற்றவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்து வாழ்வர். ஒருவருக்கொருவர் ஊடலுக்குக் காரணம் அறிந்து செயல்படுவர். அவரவர் இன்பமே பெரிது என்று கருத மாட்டார்கள். அதேபோல அவர்களைச் சுற்றி இருப்பவர்களும் அதனைப் புரிந்து செயல்படுவர். சமூகம் சிறந்த விழிப்புணர்வுடன் செயல்படும்.

## முடிவுரை

மானுடவியல் பண்பில் முதன்மையாகத் திகழும் அகத்திணைக் கல்வியின் முக்கியத்துவத்தைச் சங்க இலக்கியம், தொல்காப்பியம், திருக்குறள் வாயிலாக இந்த தலைமுறையினருக்குக் கொண்டு சேர்த்தல் வேண்டும். சங்க கால மக்கள் தங்கள் வாழ்வின் இன்பத்தைத் தாங்களே அமைத்துக் கொண்டனரெனில் அவர்கள் வாழ்ந்த சமுதாய அமைப்பு அத்தகையதாகவே அமைந்திருந்தது என்பதைப் பார்க்க முடிகிறது. எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் தோன்றியதே அகத்திணை நூல் இயற்றுவதற்காகவே என்ற எண்ணம் அகத்திணைக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தை அறியமுடிகிறது. சங்க கால மன்னர்கள் சிறந்த இல்லற நெறியைப் பின்பற்றி செவ்விய கணவனாகத் திகழ்ந்ததால் மக்களும் அவ்வழியே திகழ்ந்தனர். உயிர்மெய்ப் புணர்ச்சியாய் திகழும் காதல் காமம் இணைந்த இடங்களையே சங்க இலக்கியத்தில் காண முடிகிறது. இலக்கியங்கள் ஐயப்பாதை என்னும் சாவுப் பாதையைக் காட்டாது இருந்தால்தான் படிப்பவர்களும் சிறந்த நெறியைப் பின்பற்ற முடியும். இலக்கியம், உள்ளப் பண்பாவது கற்பு என்றும் இன்றியமையாத உடல் விளையாடுவது காமம் என்று புரிந்து ஒருவர் காமத்தை ஏனோர் மதித்து ஒழுக வேண்டும் என்கிறது. சங்க கால ஔவையும் பக்தி இலக்கியக்கால ஆண்டாளும் கொண்டிருந்த காதல் குறித்தத் தெளிவை இன்றைய இளைய தலைமுறையினரும் பெற்றிருத்தல் அவசியம். சங்க இலக்கியம், திருக்குறள், தொல்காப்பியம் போதித்த அகத்திணைக் கல்வியைச் இன்றைய சமூகத்தினருக்கு விழிப்புணர்வூட்ட பள்ளிப் பருவத்திலேயே கற்றுக் கொடுத்தல் வேண்டும். இன்றைய சமூகம் அகத்திணைக் கல்வி பற்றிய விழிப்புணர்வு இல்லாததால் தான் காதல், காமத்திற்குரிய வேறுபாடு அறியாது மிக மோசமான வழியில் சென்று கொண்டிருக்கிறது. ஆண் பெண்ணுக்குள் புரிதல் இல்லாமல் போகின்றது. இதனைப் பற்றிய புரிதலும் தெளிவும் இருந்தால் மிகச் சிறந்த சமுதாயம் உருவாகும். அதற்கு அகத்திணைக் கல்வியைச் சங்க இலக்கியம், திருக்குறள், தொல்காப்பியம் வாயிலாக எடுத்துரைக்கலாம். சங்க இலக்கியத்தில் உள்ள 1862 அகப்பாடல்கள் வாயிலாகவும் திருக்குறள் காமத்துப்பாலில் உள்ள 250 குறளில் வரும் தலைவன் தலைவியின் வாயிலாகவும் சிறந்த அகத்திணைக் கல்வியைப் படிப்பவர் பெறுவர். அத்தகைய சூழலை நாம் உருவாக்கிக் கொடுத்தால் இன்றய இளைய சமுதாயத்தினரும் அடுத்து வரும் சமுதாயத்தினரும் காதல் காமம் பற்றிய விழிப்புணர்வு பெற்றுச் சிறந்த பாதையில் பயணிப்பர் என்பது திண்ணம்.

இன்றைய இளைய தலைமுறைக்கு ஏனைய கல்வியோடு அகத்திணைக் கல்வியைக் கட்டாயப் பாடமாக அளிக்கப்பட வேண்டும்.

## References

Manikkam, (2008) Sanga Ilakkiyam Moolamum Uraiyum, Varthaman Pathippagam, Chennai, India

Manikkam, V.S. (2013) Tamil kadhal, Meenaktchi Puthaga Nilayam, Chennai, India

Subramaniyan, S.V. (1998) Tholkappiyam Thelivurai, Manivasakar Pathippagam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License